# CHAPTER – 32

# பண்டைய தமிழ் மருத்துவ நூல்கள் – ஓர் ஆய்வு

**முனைவர் ந. சேதுராமன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை,
பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர்–1.

இலக்கிய வகையாக வளர்ச்சியுற்று வடிவநிலை பெற்ற மருத்துவம் – அதன் கண்ணமைந்த செய்யுள்கள், வடிவங்களுக்கேற்ற யாப்பின் உறுப்புகளான எதுகை, மோனை, அடி தொடை போன்ற செய்யுளுறுப்புகளைக் கொண்டு வெண்பா, ஆஞிரியப்பா, கலிப்பா, கலி வெண்பா, விருத்தங்கள், உவமவகை, அணிவகை ஆகியவற்றை வடிவமாகக் கொண்டன.

**சித்தர் இலக்கியம்:**

தமிழில் வழங்கி வரும் மருத்துவ நூல் ஆஞிரியர் பெயர்கள் அனைத்து சித்தர்கள் பெயராலேயே வழங்கப்படுகின்றன. ஆகத்தியர் 12000, திருமூலர் 8000, மச்சமுனி 800, சட்டமுனி 3000, கொங்கணர் 3000, கோரக்கர் சந்திரரேகை என்றே குறிப்பிடப்படுகின்றன. இப்பெயர்கள் அனைத்தும் சித்தர் பெயராகவே இருப்பதனால், மருத்துவ இலக்கியம் அனைத்தும் சித்தர் இலக்கியம் என்னும் பொதுப் பெயரால் வழங்கப்படுகின்றன.

சித்தர் இலக்கியம் முழுவதும் மருத்துவம், வாதம்,யோகம், ஞானம் என்னும் நான்கு கூறகளைக் கொண்ட மருத்துவத்தின் அடிப்படைகளை வகுத்துக் கொண்டு நோய்களைக் கண்டறிதல், மருந்துகளை நோய்களுக்கு ஏற்றவாறு தயாரித்து அளித்தல், நோய் அணுகாதிருக்க கற்ப முறைககளைக் கூறுதல், சாகா நிலையைப் பெற யோக முறைகளை விளக்குதல் போன்ற செய்திகளையும் முறைகளையும் உரைப்பதால் 'மருத்துவ இலக்கியம்' என்றும் வழங்கப்படும். ஆவ்வாறான மருத்தவ இலக்கிய நூல்கள் பழங்காலத்திலிருந்தே தமிழ் மொழியில் வழங்கி வருவதனால், அவை தமிழ் மருத்துவ நூல் என்று பழமையைச் சுட்டும் பெயராகவும் வழங்கப்படுகின்றன.

**மருத்துவ நூலாசிரியர்**

தமிழ் மருத்துவ நூல்கள் பெரும்பாலும் சித்தர் எனப்படும் திருமூலர் அகத்தியர், போகர், புலிப்பாணி, மச்சமுனி, சட்டமுனி போன்ற முனிவர்கள் பெயராலேயே வழங்கப்படுகின்றன. இந்நூல்கள் அனைத்தும் சித்தர்களால் இயற்றப் பெற்றவை அல்ல. சித்தர்களின் மருத்துவ முறைகளையும், மருத்துவக் கொள்கைகளையும் பரம்பரை பரம்பரையாகக் கைக்கொண்டவர்களும் அவர்கள் பரம்பரையைச் சேர்ந்த மருத்துவப் புலவர்களும் பாடியவை.

துமிழ் மருத்துவத் துறையில் அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்கள் அமுதக் கலைஞானம், வைத்திய காவியம், பாலவாகடம், செந்தூரம், முப்பூ, கற்பம் போன்ற மிகுதியாகக் காணப்படுகின்றன. முலவகைப் பெருநூல்களும், சிறுநூல்களும் இவரின் நூல்களாகக்

கூறப்பெறுகின்றன. இத்தகைய நூல்களில் பல பிற்காலத்தில் மற்றையோரால் எழுதப்பட்ட நூல்கள் என்று அறிஞர்கள் துணிகின்றனர். மருத்துவ நூல்கள் எல்லாம் குறிப்பிடும் ஆஞ்ரியரால் இயற்றப் பெறவில்லை என்றாலும், ஒரு சில நூல்கள் அவரால் இயற்றப் பெற்றவை என்று குறிப்பிட்டுக் காட்டுவதற்கு ஏதுவாக எவ்விதமான சான்றுகளும் அமையவில்லை. ஏல்லா நூலும் மூல ஆஞ்ரியரால் இயற்றப் பெற்றவை என்போர்க்கும், எந்த நூலும் மூல ஆஞ்ரியரால் இயற்றப் பெற்றவை அல்ல என்று கூறுவோர்க்கும் ஆதாரவாகவே மருத்துவ நூல்கள் அமைந்திருக்கின்றன. மருத்துவ நூலின் செய்யுளைக் கொண்டு அதனை இயற்றிய ஆஞ்ரியரின் பெயரைக் கண்டறிய இயலாத நிலை ஏற்படுகிறது. சித்தர் இலக்கிய நூலின் செய்யுளைக் கொண்டோநடையைக் கொண்டோ வழங்கப்படும் மொழியைக் கொண்டோ எந்தச் சித்தர் என்று கண்டறிய முடியாத நிலை ஏற்படுகிறது. குாரணம் எந்தச் சித்தரின் நடையும் இதவரை அறுதியிட்டுக் கண்டறியப்படாமல் இருப்பதேயாகும்.

**மருத்துவர் மரபு**

வால்மீகி காலம் முதற்கொண்டு கம்பன் காலம் வரை அகத்தியர் மரபு என ஒன்று இருந்து வந்திருக்கிறது. ஆதி சங்கரர் மரபு, தருமையாதீன மரபு போன்று வளர்ந்து நின்ற சங்கிலித் தொடரில் ஏதோ ஓர் அகத்தியர் மருத்துவம் எழுதி, அக்கருத்து செவி வழிப் பேணப்பட்டு, பிற்காலத்தில் புலமை செறிந்த மரபினரால் எழுதப் பெற்றதால் நூல் நடை பழமைப் பொலிவைப் பெறவில்லை என்னும் கருத்தும் நிலவுகிறது.

**மருத்துவச் சுவடிகள்:**

தமிழ்நாடு அரசு தொகுத்திருந்த சுவடி நூல்களின் சுருக்க விளக்கக் குறிப்பேடுகளை 1910இல் ஐந்து தொகுதிகளை வெளியிட்டது. 1911–ல் அதன் திருந்திய பதிப்பை வெளியிட்டது 1932ல் தமிழ்ச் சுவடிகளின் அகரவரிசைக் குறிப்பேட்டுத் தொகுதிகளை வெளியிட்டது. 1980–ல் திருத்தி வெளியிட்ட தமிழ்ச் சுவடிகளின் அகர வரிசைக் குறிப்பேட்டின்படி மருத்துவச் சுவடிகள் 574 ஆகக் காணப்படுகின்றன. இத்தொகுப்பில் அனைத்துச் சுவடிகளும் அடங்கும் என்றும் கூறமுடியாது. இத்தொகுப்பில் காணப்பெறாத வேறு சில சுவடிகள் வேறு இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. ஊதாரணமாக உஸ்மான் கமிட்டி(1924) வெளியிட்ட தொகுப்பில் எம்தூதுவன், ஞானட்டா, உலா போன்ற சுவடிகள் காணப்படுகின்றன. அவைஅரசு வெளியிட்ட அட்டவணையில் காணப்பெறாதவைகள் ஆகும்.

துமிழில் மருத்துவச் சுவடிகளின் அட்டவணையைத் தொகுத்து வெளியிட்ட வே.இரா.மாதவன் இதவரை சுமார் 3000 சித்த மருத்துவச் சுவடிகள் கண்டறியப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் அது முடிவடைந்ததாகக் கூறமுடியாது. அதுபோல் மேலும் தொடர்ந்து தொகுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

தொகுக்கப் பெற்ற மருத்துவச் சுவடிகள் அனைத்தும் வெவ்வேறானவை அல்ல. ஒரு தலைப்பில் உள்ள சுவடியே பல்வேறிடங்களிலிருந்து பெறப்பட்டிருக்கின்றன. ஆவை மட்டுமின்றி ஒரு தலைப்பில் உள்ள சுவடியே வெவ்வேறு தலைப்பிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக போகர் 700 என்னும் மருத்துவ நூல் போகர் என்னும் சித்தர் நூலாக அறியப்படுகிறது. ஆந்தூர் பிரம்மமுனி எண்ணூறு என்னும் வேறு பெயரால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது என்பது அறியத்தக்கது.

அக்குறைபாட்டினைப் போக்குதற்குச் சுவடிகள் அனைத்தும் ஒப்பு நோக்கப்பட்டு, திரண்ட ஆழ்வினை மேற்கொள்வது ஒன்றே சரியான முறையாகும்.

**ஆகத்தியர்:**

தமிழில் காணப்பெறும் மருத்துவ நூல்களில் அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்களே அதிகமாக இருக்கின்றன. கீழ்த்திசைச்சுவடி நூலகத் தொகுப்பில் காணப்பெறும் மருத்துவச் சுவடிகளில் அகத்தியர் பெயரால் வழங்கப்பெறும் 166 சுவடிகள் உள்ளன. ஆத்தனை செய்யுள்களையும் ஒருவரால் இயற்றிட இயலுமா? ஏன்று எண்ணும் போதே ஒருவித மலைப்புத் தோன்றுகிறது. ஆந்நூல்களில் காணப் பெறுவது கற்பனை செய்யுள்கள் அல்ல. ஆறிவியல் கருத்துகளைக் கொண்ட மருத்துவச் செய்யுள்கள். மருத்துவ முறைகள் அனைத்தையும் ஒருவரே அறிந்திருந்தாலும், அத்தனைச் செய்யுள்களையும் இயற்றுவதற்குச் செலவாகும் காலம் பல ஆண்டுகள். அப்படியிருக்கும் போது அகத்தியர் பல மருத்தவ நூல்களை இயற்றினார் என்னும் கருத்து வலுவிழக்கின்றது.

முறைந்த மருத்துவ நூல்கள் பதிப்பில் வெளிவந்த நூல்களின் பாடல்கள் சில நூல்களைப் பற்றிய செய்திகளைக் கூறுவனவாக அமைந்திருக்கின்றன. ஆவ்வாறு கூறப்பெறுகின்ற நூல்கள் தொகுக்கப்பெற்ற பட்டியல்களில் காணப் பெறாதவை. ஆவ்வாறான நூல்களில் சிலவற்றின் விவரம் வருமாறு.

அகத்தியர் 81000, அகத்தியர் 51000, அகத்தியர் 30000, அகத்தியர் 21000, அகத்தியர் 18000, அகத்தியர் 8000, திருமூலர் 8000, பரஞ்சோதி 8000, கோரக்கர் வெண்பா, மச்சமுனி கலிப்பா, சங்கர மாமுனி கிரந்தம் போன்றவையாகும்.

மேற்கண்ட நூல்களின் பெயர்கள் மட்டுமே அறியக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆனாலும் தேரையர் யமக வெண்பா என்னும் நூலுக்கு இயற்றிய உரையில் மேற்கோளாகக் காணப்பெறும் பாடல்களில், அகத்தியர் 21000 என்னும் நூலின் பாடல்களும் காணப்படுவதனால், அந்நூல் இருந்ததற்கான அடையாளம் புலப்படுகிறது. மேலும் அந்தூர் உரையில் 84 மேற்கோள் நூல்கள் இடம் பெறுகின்றன. 5 அவற்றுள் பல வழங்கிவரும் நூல்களாகவும் இருக்கின்றன. ஆவற்றின் பெயர்களைக் கொண்டு அவை பழந்தமிழ் நூல்களாகவும் இடைப்பட்ட காலத்து நூல்களாகவும் இருந்தனவெனக் கருதலாம்.

ஆத்தகைய நூல்களின் பயன்கருதி அவற்றைத் தொகுத்து வெளியிட்டால் மருத்துவத்துறைக்கு மிகவும் பயனுடையதாக அமையும். ஆத்தகைய நூல்களின் வழி நூல்கள் ஏவை என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

சுவடி நிலையங்கள் தமிழ் மருத்துவச் சுவடிகளைத் தொகுத்தும் பாதுகாத்தும் வருகின்ற நிலையங்களாக பன்னிரண்டு நிலையங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களிலிருந்து பெறப்பெற்ற மருத்துவச் சுவடிகள் அவ்விடங்களில் பாதுகாக்கப்படுகின்றன.

**சுவடி நிலையங்களாவன:**

1). துமிழ்ப் பல்கலைக்கழகம், ஒலைச்சுவடிகளைத் தொகுத்துப் பாதுகாப்பதுடன் அவற்றை ஆய்வு செய்வதற்கென்று ஒலைச் சுவடித்துறை என்றொரு தனித்துறையையும் இயக்கி வருகிறது.

ஆத்துறையில் சுமார் 500 சுவடிகள் இருக்கின்றன. அவற்றுள் மருத்துவச் சுவடிகள் மட்டும் ஏறத்தாழ 60 சதவீதம் எனலாம்.

2). கூசென்னை அரசினர் கீழ்திசைச்சுவடி நூலகம், பல்லாயிரக் கணக்கான சுவடிகளின் களமாக விளங்குகிறது, இந்நூலகம். ஆய்வாளர் சுவடியியல் கற்போர், பதிப்பாளர், மருத்துவர், கல்வியாளர் போன்ற அனைவரும் பயன்படுத்தும் நோக்கில் அமைந்திருக்கிறது. இந்நிலையத்திலுள்ள தமிழ் மருத்துவச் சுவடிகளின் பட்டியல் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

3). தஞ்சைச் சரசுவதி மஹால் நூல் நிலையம், தஞ்சைமன்னர் சரபோஜி (கி.பி.1798 –1832) அவர்களால் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு துறை சார்ந்த சுவடிகள் கையெழுத்துப் பிரதிகள் எனத் தொகுக்கப்பெற்று பாதுகாக்கப்படுகின்றன. இந்நிலையத்தில் பல்வேறு தலைப்புகளைக் கொண்ட 396 மருத்துவச் சுவடிகள் உள்ளன.

4). ஊலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 270 மருத்துவச் சுவடிகளைத் தொகுத்திருக்கிறது. அவற்றுள் சில புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

5). சித்த மருத்துவ மேம்பாட்டுக்குழு 478 தலைப்புகளைக் கொண்ட சுவடிகளைச் சேகரித்துள்ளது.

6). முத்திய அரசால் 1924–ல் நீணிஅரசர் உஸ்மான் தலைமையில் அமைக்கப் பெற்ற சித்த மருத்துவ நூலாய்வுக்குழு அதனது அறிக்கையில் 594 சுவடிகளைத் தொகுத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

7). ஊ.வே.சாமிநாதையர் நூலகம், 15 மருத்தவச் சுவடிகளைப் பாதுகாக்கிறது.

8). விருத்தாசலம் குமார வீரசைவ மடத்தில் 15 மருத்துவச் சுவடிகள் இருக்கின்றன.

9). மூாண்டிச்சேரி பிரஞ்சு இந்தியக் கலைக்கூடம் 80 சுவடிகளைப் பாதுகாக்கிறது.

10). மதுரை தமிழ்ச்சங்கம் 24 தலைப்புகளைக் கொண்ட நூல்களைப் பாதுகாக்கிறது.

11). திரவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடி நூலகம் 165 மருத்துவச் சுவடிகளைக் கொண்டிருக்கிறது.

12). கூசென்னை ஆஞ்யவியல் நிறுவனம் பல சுவடிகளைத் தொகுக்கும் நிறுவனமாக விளங்குகிறது.

13). சூமற்கண்ட நிலையங்களில் காணப்படும் சுவடிகள் மட்டுமல்லாது பல தனியார் நிறுவனங்கள், மருத்தவச் சாலைகள், மருத்துவர்கள், சோதிடர்கள், மாந்திரீகர்கள், துறவிகள், மடாலயங்கள், சித்தர் பீடங்கள், கோயில்கள் எனப் பல்வேறிடங்களில் மேற்குறிப்பிட்ட தொகுப்புகள் அடங்காத சுவடிகள் பயன் கருதாது முடங்கிக் கிடக்கின்றன.

**சூமலை நாடுகளில் தமிழ் மருத்துவச் சுவடிகள்:**

மேலை, கீழை நாடுகளில் சில வணிகர்கள், அரசுத் துறை பயணிகள் மூலமாக இந்தியாவுடனும் குறிப்பாகத் தமிழகத்துடனும் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. ஆவ்வாறான தொடர்புகளினால் தமிழகத்திலிருந்து பல மருத்துவச் சுவடிகள் அந்நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முண்டையக் காலத்தில் கலைக் கோட்டு முனிவர் என்றொரு முனிவர் இருந்ததாகத் தெரிகிறது. இவர் போகருக்கு முந்தைய காலத்தவர். இம்முனிவர் ககனவிட்தை 18008, இரசாயன

நூல், சிற்பம் 100000 என்னும் நூல்களை இயற்றியுள்ளதாகக் கோரக்கர் சந்திர ரேகை என்னும் நூல் குறிப்பிடுகிறது.

குலைக் கோட்டுத் தண்டு என்ற நிகண்டு நூலைத் தமிழில் இயற்றியவர் கலைக் கோட்டு முனிவர் திரவள்ளுவர் காலத்தில் சொற் றொகை என்னும் சொல்லின் தொகுதி இருந்தது. க்ஷசால்லின் தொகையறிந்த தூய்மையவர் என்பது குறள். ஆவ்வாறான சொற்றொகையைச் செம்மையாகச் செய்தவர் கலைக் கோட்டு முனிவராவார்.[7] சென்னையில் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் ஆய்வுரை நிகழ்த்திய ஜெர்மன் நாட்டு அறிஞர் கலைகோட்டு முனிவரைப் பற்றியும், அவர் பெயரால் வழங்கிவரும் நூல்களைப் பற்றியும், நூலுள் நுவலப் பெற்ற பொருட் சிறப்புப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.[8] அந்த அறிஞர் கூறிய கட்டுரை வரிகளிலிருந்து கலைக் கோட்டு முனிவரின் நூலகள்; ஜெர்மன் நாட்டில் பாதுகாக்கப்படுவதாக அறிய முடிகிறது. ஆவ்வாறான பல அரிய மருத்துவ நூலகள் மேலை, கீழை நாடுகளுக்கும் சென்றிருக்கின்றன. அவ்வாறு இருப்பதாக அறியப்படும் சுவடிகளைப் பற்றிய விரிவான தகவல்களைத் திரட்டி ஆய்ந்து, புதுப்பித்தல் தமிழ் மருத்துவத் துறைக்கு வலுச்சேர்க்கும்.

### *துணை நூல்கள்:*


1. திருமூலர் - திருமந்திரம்.
2. சித்தர் இலக்கியங்கள்
3. குப்புசாமி முதலியார், க. நா, சித்த வைத்தியத் திரட்டு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை , சென்னை, 2009.
4. சோமசுந்தரம், மீ. ப., சித்தர் இலக்கியம், முதல் தொகுதி, அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம் , 1988.
5. சோமசுந்தரம், மீ. ப., சித்தர் இலக்கியம், ஆறாம் தொகுதி,அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம் , 2009.